மானாமதுரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. இன்று தேர்தல் பிரச்சாரம்

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



பெரிய கருப்பன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிவகங்கை, ஏப்.2-

நடைபெற உள்ள சட்ட மன்றத் தேர்தலில் மதச்சார் பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து முன்னணி தலை வர்கள் தீவிர தேர்தல் பிரச்சா ரத்தினை மேற்கொண்டுள் ளார்கள். அதன் அடிப்படை யில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இன்று (2ம் தேதி -வியாழக்கிழமை) காலை 10 மணி முதல் 12 மணி வரையில் கழக துணை பொதுச் செயலாளர் கனி மொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தேர்தல் பரப்புரை யில் ஈடுபடுகிறார். காலை யில் மதுரையில் இருந்து வேன் மூலம் திருப்புவனம் மானாமதுரை ஆகிய ஊர்க ளில் மானாமதுரை சட்ட மன்றத் தொகுதி வேட்பாளர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.வை ஆதரித்து வாக்கு சேகரிக்கிறார். இதில் மதச்சார்பற்ற முற் போக்கு கூட்டணி நிர்வாகி கள், மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு சிவ கங்கை மாவட்ட கழக செய லாளர் - அமைச்சர் கே ஆர்.

நெல்லை கிழக்கு மாவட்ட

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி செயல் வீரர்கள் கூட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிவிப்பு!

நெல்லை, ஏப்.2-

நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர் களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் அ றி வு று த் த லி ன் ப டி , கழக துணை பொதுச் செயலாளர், தி.மு.க. நாடா ளுமன்ற குழு தலைவர் கனி மொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் ஆலோசனையின் படி, இராதாபுரம் சட்ட மன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் சட்டப்பே ரவை தலைவர் மு.அப்பாவு அவர்களை ஆதரித்து, நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம் பெல் தலைமையில், வள்ளி யூர் பி.ஆர்.மஹாலில் வைத்து இன்று (02.04. 2026-வியா ழக்கிழமை) காலை 10 மணிக்கு செயல்வீரர் கூட் டம் நடைபெறுகிறது.

எனவே தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்டப் பொறுப்புக்குழு உறுப் பி னர் க ள் , ஒன் றி ய , நகர, பேரூர் கழக செயலா ளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தோழமைக் கட்சி நிர்வாகி கள், வள்ளியூர் வடக்கு, வள் ளியூர் தெற்கு, பணகுடி பேரூர், வள்ளியூர் பேரூர் கழக நிர்வாகிகள், BLA2, BDA, BLC, மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவரும் தவ றாமல் கலந்து கொள்ளு மாறு கேட்டுக் கொள்கி றேன்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

இரா. ஆவுடையப்பன் தலைமை! வேட்பாளர் மனோஜ் பாண்டியன் – அப்துல்லா முன்னிலை!

'திராவிட மாடல் 2.0' ஆட்சி அமைய கண்துஞ்சாது! பசி நோக்காது! பணியாற்றுவோம்!

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்

நெல்லை, ஏப்.2-

நெல்லை மேற்கு மாவட்ட கழக அலுவலகம், டாக்டர்.கலைஞர் அரங்கத் தில் மாவட்ட பொறுப்பா ளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் செயற்குழு உறுப்பினர் கள் ஆ.பிரபாக ரன், கே.கே.சி. பிரபாகரன், ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட் பாளர் பி.எச்.பி.மனோஜ் பாண்டியன், மாநில அயலக அணி துணை செயலாளர் எம்.எம். அப்துல்லா, ஆலங் குளம் தொகுதி பார்வையா ளர் கணேஷ்குமார் ஆதித் தன், மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல், ப.தமயந்தி, கு.தமிழ்ச்செல் வன் ஆகியோர் முன்னி லையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் இராமச்சந்தி ரன், கணேசன், அபூபக்கர், கதிர்வேல் முருகன், ரவிச்சந் திரன், ஒன்றிய செயலாளர் கள், பொறுப்பாளர்கள் அம் பாசமுத்திரம் கிழக்கு சிவனு பாண்டியன்(எ) பரணிசே கர், மேற்கு ஜெகன், சேரன்ம காதேவி கிழக்கு முத்து பாண்டி (எ) பிரபு, மேற்கு முத்துகிருஷ்ணன், ஆலங்கு ளம் கிழக்கு செல்லத் துரை, மேற்கு சமுத்திரபாண் டியன், தெற்கு சிவக் குமார், கடையம் கிழக்கு குமார், மேற்கு ஜெயக் குமார், வடக்கு மகேஷ் மாய வன், கீழப்பாவூர் கிழக்கு சிவன் பாண்டியன், வடக்கு பொன்செல்வன், பாப்பாக் குடி மாரிவண்ணமுத்து, நகர செயலாளர் வி.கே.புரம் கி.கணேசன்,

பேரூர் செயலாளர்கள் ஆழ்வார்குறிச்சி அழகேசன், ஆலங்குளம் நெல்சன், முக்கூ டல் லஷ்சுமணன், கீழப்பா வூர், ஜெகதீசன், மணிமுத் தாறு முத்து கணேசன், கல்லி டைக்குறிச்சி, இசக்கி பாண்டியன், வீரவநல்லூர் சுப்பையா, சேரன்மகாதேவி மணிஷா செல்வராஜ், மேலச் செவல் மணிகண்டன், பத்த மடை சிந்தா மதார், கோபா ல ச மு த் தி ர ம் வ ா னு வ ா ம லை , அ ணி அமைப்பாளர் கள் இளை ஞர் அணி ஜெ.ஜான் ராபீந் தர், மாணவர் அணி ஆ.முத் துகிருஷ்ணன், மகளிர் அணி திவ்யா மணிகண்டன், மக ளிர் தொண்டரணி சங்கீதா சுதாகர், இலக்கிய அணி ந.சுப்பிரமணியன் (எ) நெல் லைமணி, மருத்துவர் அணி கி.கார்த்திக்குமார், கலை இலக்கிய பகுத்தறிவுபே ரவை அணி சு.க.நெடு ஞ்செ ழியன், தகவல் தொழில் நுட்ப அணி பிரேம்ஆனந்த், அயலக அணி கா. பீர்முகம்மது, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி நா.பிர காஷ், பொறியாளர் அணி இ.அருணன், விளையாட்டு மேம்பாட்டு அணி தவசி மணிகண்டன், சுற்றுச்சூழல் அணி பொன் அறிவழகன் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

இந்த கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

திராவிட மாடல் ஆட்சி யின் முதலமைச்சர் கழகத்த லைவர் அன்புத்தளபதியார் அவர்கள் தேர்தல் சுற்று பய ணத்திற்காக திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை தர இருக்கிறார்கள். ஆலங்குளம் வெற்றி வேட்பாளர் பி.எச். பி மனோஜ் பாண்டியனை ஆதரித்தும், அம்பாசமுத்தி ரம் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்தும் தேர்தல் பிரச்சா ரம் செய்ய உள்ளார்கள். இந் நிகழ்ச்சிக்கு மாவட்ட ஒன் றிய, ர,பேரூர், கிளை, வார்டு,சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதசார் பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளோடு திரளாக பங்கேற்க இக்கூட் டம் தீர்மானிக்கிறது.

வெல்வோம் 200 படைப்போம் வரலாறு என்ற தாரக மந்திரத்துடன் முதலமைச்சர் கழகத்தலை வர், அன்புத்தளபதியார் அவர்கள் சிறப்பாக கூட் டணி அமைத்து பல தேர்தல் களில் வெற்றி வாகைசூடி இந்தியாவிற்கே வழிகாட்டு கின்ற வகையில் ஒரு கூட்ட ணியை அமைத்து தலைமை பண்பு என்ன என்பதை மிக தெளிவாக உணர்த்தி இந்தி யாவே முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதி யார் அவர்களின் இந்த சீரிய முயற்சியையும், வியூகத்தை யும் மிகுந்த ஆச்சரியத் தோடு பார்த்து போற்றி மகிழ்கிறது.

தலைவர் அவர்களு டைய கரத்தை வலுப்படுத் தும்வகையில்திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம், ஆலங்கு ளம் சட்டமன்ற தொகுதிக ளில் தி.மு.க மற்றும் தோழ மைக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் களை மாபெரும் வாக்கு வித் தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய இக்கூட்டம் தீர்மா னி க் கி ற து . அ த ற் க ா க வருகின்ற தேர்தல் முடிந்து திராவிட மாடல் 2.0 ஆட்சி யின் முதல்வராக தலைவர் தளபதியார் அவர்கள் பதவி ஏற்றார் என்ற மகிழ்ச்சியான செய்தியினை ஊடகங்களில் பார்க்கும் வரையில் நம்மு டைய பணி மிகவும் இன்றி யமையதாக இருக்க வேண் டும்.அதற்காக நாம் அனைவரும் கண்துஞ்சாது, பசி நோக்காது பணியாற்று வது என இக்கூட்டம் தீர்மா னிக்கிறது.

முதலமைச்சர் கழகத்த லைவர் அன்புதளபதியார் அவர்கள் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு அறி வித்துள்ள வரலாற்று சிறப்பு மிக்க தேர்தல் வாக்குறுதிகள் மக்கள் மகிழ்ச்சியோடு, பாராட்டக் கூடிய திட்டங் கள் இல்லத்தரசி திட்டம் (வீட்டு உபயோக பொருள் கள் வாங்க ரூபாய் 8000 ம் கூப்பன்).

காலை உணவு திட்டம் (எட்டாம் வகுப்பு வரை விரிவு படுத்துதல்).

கலைஞர் மகளிர் உரி மைத்தொகை ரூபாய் 2000 மாக உயர்த்தி வழங்குதல். நெல்,கரும்பு, பால் கொள்மு தல் விலை உயர்த்தப்படும்.

1.5 இலட்சம் அரசு காலிப்பணியிடங் கள் நிரப் பப்படும்.விவசாயிகளுக்கு எவ்வித மீட்டரும் பொருத் தப்படாத நவீன மின்சார பம்பு செட்டுகள் வழங்கப்ப டும்.இதுபோன்ற பல மக் களை மகிழ்விக்கின்ற வகை யில் தேர்தல் வாக்குறுதிகளை தந்துள்ள முதல்வர் கழகத்த லைவர், அன்புத்தளபதியார் அவர்களை இக்கூட்டம் போற்றி புகழ்கின்றது.

முதலமைச்சர் கழகத்த லைவர் அன்புதளபதியாரின் ஆணையை ஏற்று தமிழ்நாடு முழுவதும் கழகத்தின் வெற் றிக்காக அல்லும்,பகலும் அயராது தேர்தல் பிரச்சாரம் செய்து வரும் துணை முதல மைச்சர் கழகத்தின் இளைஞ ரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இக் கூட்டம் மனதார பாராட்டு கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

அமைச்சர் கே ஆர் பெரியகருப்பன் பங்கேற்பு !

சிவகங்கை, ஏப். 2-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற் போக்கு கூட்டணி செயல்வீ ரர்கள் கூட்டம் திருப்பத்தூர், சிங்கம்புணரி ,கல்லல், கோட்டையூர் ,ஆகிய ஊர்க ளில் நடைபெற்றது இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார் பில் ஒன்றிய நகர நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசினார் கள். இதில் காங்கிரஸ் கட்சி சார்பில் முன்னாள் எம். எல்..ஏ. ராம. அருணகிரி, வழக்கறிஞர் கணேசன், அப் துல் கலாம் எஸ்டிபிஐ,, ஹைதர் அலி அம்பலம் முஸ் லிம் லீக் ,ரமேஷ். தமிழர் தேசம் உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பேசினார் கள். முன்னாள் அமைச்சர்மு. தென்ன வன், கழக செய்தி தொடர்பு துணைத் தலைவர் மருது அழகுராஜ் ,கல்லல் கே.ஆர்.அசோகன், ஆகி யோர் பேசினார்கள். கூட் டத்தில் கலந்து கொண்டு திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் பேசியதாவது: - கழக தலைவர் தளபதி அவர் கள் மதச்சார்பற்ற முற் போக்கு கூட்டணியில் 25க்கும் மேற்பட்ட கூட் டணி கட்சிகளை ஒருங்கி ணைத்து தலைமை தாங்கி சிறப்பாக நடத்தி வருகிறார் .கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ கம் மிகவும் நிதி நிலைமை மோசமாக இருந்தது .2021ல் கழகத் தலைவர் பதவியேற் றதும் நிதி நிலைமையை சீராக்கி தமிழகத்தை இந்தி யாவிலேயே நம்பர் ஒன் மாநிலமாகக் கொண்டு வந் தார். கடந்த ஐந்தாண்டுக ளில் கல்வி, மருத்துவம் ,உள் பட பல்வேறு துறைகளில் தமிழகம் வளர்ச்சி அடைந் துள்ளது . பெண்களுக்கு பல் வேறு குறிப்பாக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளது இதனால் கிரா மத்தில் பொருளாதாரம் உயர்ந்துள்ளது.

இந்தியாவிலேயே நமது முதல்வருக்கு இணையாக யாரும் இல்லை என்ற பேச்சு பேசப்பட்டு வருகின்றது. தமிழக முதல்வரின் இத்த கைய செயல்பாட்டினை கண்டு ஒன்றிய அரசு அஞ்சு கிறது. இதனால் ஒன்றிய அரசு நமக்கு தரவேண்டிய நிதிகளை தராமல்உள்ளது. தமிழகத்திற்கும் தமிழக முதல்வருக்கும் நல்லபெயர் வந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருகின்றது. தமிழகத்தின் வளர்ச்சிக்கு பல்வேறுவழிக ளில் முட்டுக்கட்டை போட்டு வருகிறது .

ஆனால் இதையெல்லாம் மீறி தமிழகத்தின் பொருளா தார வளர்ச்சியினை முதல் வர்கள் 11.1 ஒன்று சதவீதம் இரண்டு மடங்கு உயர்த்தி உள்ளார். இவருடைய கடந்த ஐந்தாண்டு கால தொழில் ஈர்ப்புகளினால் 12. 50 ஆயிரம் கோடி வருமா னம் வந்துள்ளது. லட்சக்க ணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பினை பெற் றுள்ளார்கள். முதல் வர் அவர்கள் நிர்வாக திறமையி னால் நிதி நிலைமையும் சமாளித்து தமிழகத்தில் ஆட்சியை சிறப்பாக நடத்தி வருகிறார். அவரது ஆட்சி தொடர வேண்டும். அவர் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசி னார் .

இந்த கூட்டத்தில் ஒன் றிய செயலாளர்கள் செயலா ளர்கள் எஸ். சண்முகவடி வேல், விராமதி மாணிக்கம், பூமணி, கே .பாலசுப்பிர மணி யன், பி. செல்வராஜ், குன்னக்குடி சுப்பிர மணி யன், பேரும் கழக செயலா ளர்கள் ஆர்.கார்த்திகேயன் கதிர்வேல், கே.பி.எஸ். பழனி யப்பன், அசோக், ராசு, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ந..அம்பல முத்து, பேரு ராஞ்சி மன்ற தலைவர் திரு மதி கோகிலா ராணி நாராய ணன், துணைத்தலைவர் கள் கான் முகமது, இந்தியன் செந் தில், மாவட்ட ஆதிதிராவி டர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது மாவட்ட மாணவரணி அமைப்பாளர், கதி. ராஜ்கு மார், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என். எம். சாக்ளா,அயலக அணி சன் சீமான் சுப்பையா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப் பாளர் எஸ். எஸ் .ஏ.வல்ல பாய், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ். எ ஸ் . அ ரு ண ா ச் ச ல ம் ம ா வட்ட தகவல் தொழில் நுட்ப அணி பாலசுப்பிரம ணியன், நிர்வாகிகள் ராம. ரவி திருநாவுக்கரசு,, சகாதே வன், கார்த்தி, ஷாஜகான், ஒன்றிய பொருளாளர் ஏ.எம். கண்ணன், இளைஞரணி வைகைமாறன், மனோகரன் பசீர் ,தமிழ் நம்பி, செல்வ ராசு, உதயசண்முகம் ஒன்றி யதுணை செயலாளர்கள் சிவ புரி சேகர், எஸ். முத்து குமார், புகழேந்தி , மனோக ரன் , குடோன் மணி , சிவக் குமார், புதூர்கண்ணன், உத யம் சண்முகம் நகர பேரூர் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். கூட்டத் தில் எம்.சூரக்குடி அ.தி.மு.க கிளை நிர்வாகிகள் சண்முக ராஜா, பிரபா கரன், மேல வண்ணாரிருப்பு பூமிநாதன் உட்பட 25க்கும் மேற்பட்ட அ.தி.மு.கவினர் அக்கட்சி யில் இருந்து விலகி அமைச் சர் கே ஆர்.பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தார்கள்.

மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தலைமையில்

திருநெல்வேலி தொகுதியில் செயல்வீரர்கள் கூட்டம்!

சு.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை.ஏப்.2

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி மதச் சார்பற்ற முற்போக்குக் கூட் டணியின் செயல்வீரர்கள் கூட்டம் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை யங்கோட்டை சட்ட மன்ற தொகுதி வெற்றி வேட் பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ தலைமையில் இன்று (வியாழக்கிழமை 02. 04.2026) காலை 9 மணிக்கு பேட்டை சாலை கோடிஸ்வ ரன்நகர் ராஜா மஹாலில் வைத்து நடைபெறுகிறது. என நெல்லை மேற்கு மாந கர பொறுப்பாளரும் திரு நெல்வேலி சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பா ளருமான சு.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

ஆகவே மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர் வாகிகள் அனைவரும் தவறா மல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன் .

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

தி. மு. க. தொழிலாளர் அணி

இராமநாதபுரம் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

இராமநாதபுரம் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்களாக **எஸ். பாலகிருஷ்ணன்,** (சேதுபதி நகர், நாகாச்சி உச்சிப்புளி அஞ்சல். இராமநாதபுரம் மாவட்டம்). **கா.சத்தியேந்திரன்** (எல்.கருங்குளம், எட்டிவயல் அஞ்சல். இராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31-03-2026.

பிடிசி ஜி.செல்வராஜ்
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி

சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

(இரண்டாவது பட்டியல்)

தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்க்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சட்டமன்றத் தொகுதி		பார்வையாளர்
சீர்காழி, மயிலாடுதுறை	–	குத்தாலம் பி. கல்யாணம்
பொள்ளாச்சி, வால்பாறை	–	டாக்டர் மகேந்திரன்
பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு	–	தடங்கம் சுப்பிரமணி
தருமபுரி, பென்னாகரம்	–	டி.செங்குட்டுவன்
உதகமண்டலம், கூடலூர், குன்னூர்	–	எஸ். மோகன்
ஓசூர், தளி, கிருஷ்ணகிரி, பர்கூர்	–	பார் இளங்கோவன்
பெரம்பூர்	–	இரா. கிரிராஜன், எம்.பி.,
அம்பத்தூர்	–	வழக்கறிஞர் சலீம்
திரு.வி.க.நகர்	–	தமிழ் க.அமுதரசன்
திருவள்ளூர்	–	செஞ்சி சிவா
அந்தியூர்	–	ஏ.ஜி.வெங்கடாசலம்
ஈரோடு கிழக்கு	–	செந்தில்குமார்
ஈரோடு மேற்கு	–	திருச்செங்கோடு கந்தசாமி
மொடக்குறிச்சி	–	எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம்
குமாரபாளையம்	–	காந்திசெல்வன்
நன்னிலம்	–	குத்தாலம் க. அன்பழகன்
அரூர்	–	சத்தியமூர்த்தி
ஏற்காடு	–	எஸ்.ஆர். பார்த்திபன்
பரமக்குடி	–	வ.சத்தியமூர்த்தி
வாசுதேவநல்லூர்	–	செண்பகவிநாயகம்
சங்கரன்கோவில்	–	தங்கவேலு
சிவகாசி	–	தனுஷ் எம். குமார்
மதுரை மத்திய	–	சேலம் தரணிதரன்

குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 31.03.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜி.எம். ஷா

ஏப்ரல் 2 (2014)



கன்னியாகுமரி மாவட்டக் கழகச் செயலாளராக 1959ல் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். 1993ஆம் ஆண்டு மாவட்ட பொறுப்புக்குழு தலைவர், 1999ஆம் ஆண்டு மாவட்டப் பொறுப்பாளர் ஆகிய பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

மேலும் கழக பொதுக்குழு, செயற்குழு, சொத்து பாதுகாப்புக்குழு, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

1965 முதல் 1990 வரை மற்றும் 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை தொடர்ந்து தொடர்ந்து 30 ஆண்டுகள் வடக்கு சூரங்குடி ஊராட்சி தலைவராக மூன்று முறை போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு மக்கள் நலப் பணியாற்றியவர்.

1976ஆம் ஆண்டு அவசரநிலைக் காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்துள்ளார். மேலும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.